*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
- - - - -

# *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| *Case No.* | : | *SC No. 336 / 2018* |
| *Deposition of witness for* | : | *PW : 5* |
| *Name* | : | திரு.பாலசுப்பிரமணியன் |
| *Father's Name* | : | |
| *Village* | : | |
| *Taluk* | : | |
| *Caste* | : | |
| *Calling* | : | |
| *Religion* | : | |
| *Age* | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***18.09.2025***

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மதுரை தெற்குவாசல் நாடார் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து, தற்போது பணி ஒய்வு பெற்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் மதுரை தெற்குவாசல் நாடார் மேல்நிலைப் பள்ளியில் ரிஸ்வானா என்ற மாணவியின் பள்ளிச்சான்று நான் வழங்கியது தான். மற்றும் பள்ளி மாற்றுச் சான்றிதழ் எங்கள் பள்ளியில் வழங்கப்பட்டது தான். **ரிஸ்வானாவின் பள்ளிச்சான்று அதசாஆ.4 ஆகும். ரிஸ்வானாவின் பள்ளி மாற்றுச் சான்றிதழ் அசல் அதசாஆ.5 ஆகும்.** ரிஸ்வானாவின் பிறந்த தேதி 07.07.1998 என்று அதசாஆ.4 மற்றும் அதசாஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. பள்ளிச்சான்றிதழில் ரிஸ்வானாவின் பிறந்த தேதியை பள்ளி ஆவணங்களின் அடிப்படையில் கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>**

ரிஸ்வானா எங்கள் பள்ளியில் 9ம் வகுப்பில் சேர்ந்தார். அதசாஆ.5ல் 7வது காலத்தில் கையால் எழுதப்பட்ட எழுத்துக்களில், 1998 என்பதில், “8” எண்ணிலும், எழுத்திலும் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் கொடுக்கும் பொழுது திருத்தம் இல்லாமல் சரியாகத்தான் கொடுத்தோம். ரிஸ்வானாவின் வேறொரு பள்ளிச்சான்றிதழ் அடிப்படையில் தான் அதசஆ.5ஐ வழங்கினோம். ரிஸ்வானா வேறு பள்ளியில் 1ம் வகுப்பு எந்த ஆவணத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்டார் என்ற விபரம் பற்றி எனக்குத் தெரியாது என்றால் சரிதான். பொதுவாக மாணவர்களை பள்ளியில் சேர்க்கும் போது, பிறந்த தேதியைக் காட்டும் ஆவணங்களைப் பார்த்து பிறந்த தேதியை பதிவு செய்வது இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை